## நெழுவ பிரதேச சபை
## காலி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜுன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து நெழுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 7,122,226 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 60,500 தொகைக்கான நிழற்பிரதி இயந்திரத்தின் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 116,420 தொகை குறைவாக கணக்கீடு செய்யப் பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 70,583 தொகை பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் என கணக்கீடு செய்யப் பட்டிருந்தது, | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டிற்கான வழங்கள் மற்றும் உபகரணங்களுக்கான செலவுகள் மற்றும் போக்குவரத்து தொடர்புகள் மற்றும் தேவையான சேவைகளுக்கான செலவுகள் ரூபா 127,000 தொகை மிகையாக கணக்கிடப்பட்டுள்ளன. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | ஓவர்சியர் வெளிக்கள களஞ்சிய இருப்பு என ரூபா 45,665 தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும், பௌதீக ரீதியாக அவ்வாறான இருப்பொன்று காணப்பட வில்லை. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 18,415,413 தொகைக்கான 06 மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 5,083,553 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மைகள் என்பதால் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | 02 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக பரீட்சை மீதியில் காட்டப் பட்டுள்ள மீதிகள் மற்றும் காசேட்டில் காணப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 67,560 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மைகள் என்பதால் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டுக்கு முன்னர் இருந்து முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 21,176 தொகைக்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து தொங்கல் கணக்கை தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| ❖ 2014 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 07 அபிவிருத்தி செயற்திட்டங் களுக்காக உள்ளூராட்சி திணைக் களத்தில் இருந்து பெற வேண்டிய அரசாங்க உதவி ரூபா 3,572,194 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்குகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வேன். |
| ❖ மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி யில் உள்ளவாறு ரூபா 16,328,828 தொகைக்கான கடன்பட்டோர் மீதியில் 05 வருடங்களை மிகைத் துள்ள கூட்டுத்தொகை ரூபா 478,300 தொகைக்கான ஒரு நிலுவை வருமான மீதியும், 01 வருடத்திற்கும் 05 வருடத்திற்கும் இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 13,816,285 இற்கான நிலுவை வருமான 06 மீதிகள் உட்பட்டிருந்த போதிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தி ருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்குகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி யில் உள்ளவாறு 01 க்கும் 05 வருடத்திற்கும் இடைப்பட்ட ரூபா 260,222 தொகைக்கான பொது வழங்கள் கடன்கொடுத்தோர் மீதி ஒன்று, ரூபா 1,266,887 தொகைக்கான மூலதன செலவு கடன்கொடுத்தோர் மீதியொன்றும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வேன். |

**(உ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 12,114,561 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நித மற்றும் நிருவாக) விதி 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒரு வருடத்திற்கு ஒருமுறையேனும் கணிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 வருட காலத்தை மிகைத்துள்ள 02 வகையைச் சேர்ந்த ரூபா 265,830 இற்கான வைப்பு மீதியொன்றினை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,159,098 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 134,952 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டு முதல் காணப்படும் பொது நடைமுறைக் கணக்கு தொடர்பான காசேட்டு மீதி மற்றும் வங்கி மீதி இடையே ரூபா 19,648 இற்கான வித்தியாசத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காசேட்டின் வித்தியாசத்தை சரிசெய்ய வேண்டும். | அடுத்த வருடம் சரிசெய்வேன். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 415,500 | 403,450 | 403,450 | 41,223 | 430,000 | 288,080 | 325,854 | 40,005 |
| வாடகை | 7,369,300 | 7,414,900 | 7,333,496 | 584,946 | 6,154,800 | 5,835,950 | 6,315,457 | 202,418 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 184,300 | 259,043 | 259,043 | - | 125,000 | 189,444 | 189,444 | - |
| ஏனைய வருமானங்கள் | 853,150 | 943,969 | 1,043,969 | - | 2,079,500 | 1,182,199 | 1,182,199 | - |
| | 8,822,250 | 9,021,362 | 9,039,958 | 626,169 | 8,789,300 | 7,495,673 | 8,012,954 | 242,423 |

### 2.3.2 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி ரூபா 27,920 தொகையெனினும், அறவீடு செய்தல் ரூபா 7,411 தொகை அதாவது 26 சதவீதமாக காணப்பட்டது, | நிலுவை ஏக்கர் வரியை தாமதமின்றி அறவீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 440,897 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 5,375,900 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) கைவிடப்பட்ட செய்பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சார்ந்த மற்றும் பாதியளவு நகர் சார்ந்த பிரதேசங்களை சேர்ந்த பசுமை சுற்றாடல் வலயங்கள் ஏற்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 375,125 தொகை பணத்தில் இருந்து ரூபா 232,625 தொகையை பயன்படுத்தி நெழுவ நகரத்தை சுற்றி மற்றும் தூவிலி எல்ல வளவில் பூச்செடிகள் நடுவதற்காக மற்றும் சுற்றாடலை அலங்கரிப்பதற்காக செயற்திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 பெப்ரவரி 26 ஆம் திகதி வரை அதனை செயற்படுத்தி இருக்கவில்லை. | செயற்திட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டும். | எதிர்காலத்தில் செயற்திட்டம் நிறைவேற்றுவேன். |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அதிகாரப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் மாத்திரம் குப்பை சேகரிக்கப்பட்டு அனைத்துக் குப்பைகளும் சபைக்குச் சொந்தமான விளையாட்டுத் திடலில் கிடங்கு ஒன்று தோண்டப்பட்டு கிடங்கில் போடப்பட்டு மூடப்பட்டு வந்துள்ளது. | குப்பை அகற்றுவதற்காக நீண்ட கால வேலைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) | 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிய 2015/53 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் குப்பைகளை அகற்றுதல், சேகரித்தல், எடுத்துச் செல்லல் என்பன அத்தியவசிய தேவை ஒன்றாக ஆக்கப்பட்டிருந்த துடன், அதற்காக அலகு ஒன்று நிறுவப்பட்டு நீண்டகாலத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என சுட்டிக் காட்டியிருந்த போதிலும், அவ்வாறான வேலைத் திட்டம் ஒன்றிற்கு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | குப்பை அகற்றுவதற்காக நீண்ட கால வேலைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த டென்டர் மூலம் வாடகைக்கு கொடுத்திருந்த பொதுச் சந்தையில் மீளாய்வாண்டிற்கான மின்சாரச் கட்டண சிட்டைக்கான ரூபா 40,832 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | மின்சாரக் கட்டணம் டென்டர் பெற்றவரால் செலுத்தப்பட வேண்டும். | பதில் அனுப்பி இருக்கவில்லை. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான வர்த்தக தொடர்கட்டிடத்தின் 21 கடைகளில் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 584,971 தொகைக் கான நிலுவைக் கடை வாடகை மீதி ஒன்று காணப்பட்டது. அவற்றில் 04 கடைகளின் நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், மீதியான 17 கடைகளின் நிலுவை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுத்து நிலுவை வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 10 வெற்றிடங்களை நிரப்புவதற்காக மற்றும் 05 மிகை | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகைப் பதவிகளை | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி உள்ளூராட்சி |

| | | |
|---|---|---|
| ஊழியர்கள் முறைப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | முறைப்படுத்துவ தற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதவி ஆகும். மீதியான பதவிகளை முறைப் படுத்துவதற்கு நடவடி க்கை எடுப்பேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| சபையில் கடமையாற்றி இறந்த, ஓய்வுபெற்ற, சேவையை வரிதாக்கிய 08 ஊழியர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 144,020 இற்கான ஊழியர் கடன் மீதி ஒன்று அறவிடப்படாமல் காணப்பட்டது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடப்பட வேண்டும். | நிலுவை கடன் மீதியை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களில் இருந்து பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான நீர் பவுசரை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 100,000 பெற்றுக்கொள்வதற்கு மதிப்பிடப்பட்டி ருந்த போதிலும், சபை வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை. | வாடகைக்கு கொடுத்து வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர்பவுசரின் அளவு விசாலமாக இருந்த தால் மதிப்பிடப்பட்ட வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியாது இருந்தது. |

### 3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,483,200 இற்கான பெறுமதியுடைய 04 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 02 வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை உரித்தாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.3 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து 2008 மற்றும் 2013 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த கைடிரக்டர் ஒன்று மற்றும் ஹொயிஸ்டர் ஒன்று 2014 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது. | திருத்த வேலை மேற்கொள்ள முடியாவிடின் அப்புறப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் ஏல விற்பனை நடாத்த தீர்மானித்துள்ளேன். |

### 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது பண்டங்கள் வழங்கள் மற்றும் சேவைகளுக்காக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் ஒன்று தாயரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிப்பேன். |

### 3.5.2 வழங்கள் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது கூறுவிலைகள் அழைக்கப்படாமல் ரூபா 343,867 தொகை பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் ரூபா 534,893 தொகை பெறுமதியான சிறுவர் பூங்கா உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கூறுவிலை அழைக்கும் போது பதிவுசெய்யப் பட்ட வழங்குனர்களிடம் கூறுவிலைகள் அழைப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குறிக்கோள்சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமையினால் 03 செலவு விடயங்களில் ரூபா 97,000 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | செலவுகள் சரியாக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 04 செலவு விடயங்களின் சேமிப்புகளின் கூட்டுத் தொகை ரூபா 5,484,920 தொகை அதாவது 35 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | செலவுகள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை யின் பிரகாரம் கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்சித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியை வினவி இருக்காததுடன் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவேன். |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |